# - அரசறிவியல் -

# சுதந்திரத்திற்கு முந்திய இலங்கையின் அரசியல் மாற்றங்களும் பின்னணியும்

- 1 தொடக்கம் 7 வரையிலான வினாக்கள் பிரித்தானிய ஆட்சிக் கால சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தி பற்றிய பல கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.

1. கோல்புறூக் - கமறன் ஆணைக்குழுவினர்,
   1) அரசாங்கத்தின் வர்த்தக ஏகபோக உரிமையை தொடர விரும்பினர்
   2) தேசாதிபதி பிரதம நீதியரசரை நியமிக்க வேண்டும் என சிபாரிசு செய்தனர்.
   3) இராசகாரிய முறையின் முன்னேற்றத்தை அதிகம் மெச்சினர்.
   4) ஐரோப்பாவில் நிலவிய சுதந்திர வர்த்தகம் பற்றிய கருத்துக்களின் செல்வாக்குக்குட்பட்டிருந்தனர்.

(…….)

2. 1833 யாப்புச் சீர்திருத்தம்,
   1) சட்ட சபையில் இனவாரிப் பிரதிநிதித்துவத்தை ஒழித்தது.
   2) வலுவேறாக்கல் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
   3) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை அறிமுகம் செய்தது.
   4) இலங்கையிலிருந்து ஐரோப்பிய பயிர்ச்செய்கையாளர்களின் ஆர்பாட்டங்களின் விளைவினதாகும்.

(…….)

3. பிரித்தானியர் காலத்தில் தோன்றிய மத்திய தர வகுப்பினர்,
   1) சுதந்திரத்திற்கான ஒரு ஐக்கிய இயக்கத்தினை ஒழுங்கு செய்திருந்தது.
   2) 1911 இலிருந்த சட்ட சபைச் சீர்திருத்தங்களுக்கு காரணமாக அமைந்தது.
   3) இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்திருப்பதை ஆதரித்தது.
   4) சிவில் சேவைப் பதவிகளில் ஆர்வம் காட்டவில்லை.

4. இலங்கைத் தேசிய இயக்கம்
   1) தேசாதிபதியின் அதிகாரங்களைப் பலப்படுத்துவதற்குக் காரணமாகியது.
   2) 1915 சிங்கள - முஸ்லிம் கலவரத்துக்குப் பொறுப்புக் கூற வேண்டும்.
   3) தீவிரத்தன்மை பொருந்திய ஒரு மஹாஜன இயக்கமாக இருக்கவில்லை.
   4) குற்றவியல் சட்டக் கோவையைத் திருத்துவதில் அக்கறை செலுத்தியது.

(…….)

5. 1924 இல்நிலவிய வாக்குரிமை,
   1) சனத்தொகையில் பெரும்பான்மையோரால் பிரயோகிக்கப்பட்டது.
   2) சாதாரண பொது மக்களின் அரசியல் பங்கேற்பின் அவசியத்தை ஏற்றுக் கொண்டது.
   3) குறிப்பிட்டளவு சொத்துத் தகைமையுடைய பெண்களுக்கு வாக்குரிமையை வழங்கியது.
   4) 1931 இல் அறிமுகம் செய்யப்பட்ட சீர் திருத்தங்களால் மாற்றியமைக்கப்படவில்லை.

(…….)

6. 1910 – 1924 காலப்பகுதியில் அறிமுகம் செய்யப்பட்ட சட்ட சபைச் சீர்திருத்தங்கள்,
   1) ஐரோப்பிய பயிர்ச் செய்கையாளர்களுக்குக் கூடுதலான பிரிதிநிதித்துவத்தை வழங்கின.
   2) சட்ட சபையில் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்துவர்களின் அதிகாரங்களை மேம்படுத்தின.
   3) பிரிதிநிதித்துவ சனநாயக முறையின் வேறு பண்புகளையும் அறிமுகம் செய்தன.
   4) நீதித்துறையின் அதிகாரங்களைப் பலவீனப்படுத்தின.

(…….)

7. 1930 களில் இடது சாரி இயக்கம்,
   1) தொழிலாளர்கள் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.
   2) இலங்கைத் தேசிய காங்கிரஸின் ஒரு பிரிவாகத் தாபிக்கப்பட்டது.
   3) இலங்கைக்குப் பூரண சுதந்திரத்தை வேண்டி நின்றது.
   4) தாராண்மைவாதத்தை தமது கருத்தியலாக ஏற்றுக் கொண்டது.

(…….)

MJM Saneer MA 077 9801693

- 8 தொடக்கம் 10 வரையிலான வினாக்கள் டொனமூர் சீர்திருத்தம் பற்றிய பல கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் பொருத்தமான கூற்றைத் தெரிவு செய்க.

8. டொனமூர் ஆணைக்குழு,
   1) இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்திருப்பதில் அக்கறை காட்டியது.
   2) இலங்கையருக்கு உள்நாட்டுப் பொறுப்பாட்சியை சிபாரிசு செய்தது.
   3) இரண்டாம் மன்றமொன்றைத் தாபிப்பது பற்றிய முன்மொழிவை ஏற்றுக் கொண்டது.
   4) நிருவாகக் கருமங்களில் பெரும் பங்காற்றும் ஒரு சட்டசபையைத் தாபிப்பது பற்றியச் சிந்தித்தது.

(…….)

9. நிருவாக்க குழுமுறை,
   1) அரசாங்கத்தைச் செயல்திறன் மிக்கதாக்கியது.
   2) இலங்கையிலிருந்த தேசாதிபதிகளால் உயர்வாகப் போற்றப்பட்டது.
   3) இலங்கைத் தலைவர்களுக்கு ஒரு நிருவாகப் பயிற்சியாக அமைந்தது.
   4) அரசாங்க சபையின் சாதாரண உறுப்பினர்களால் நிராகரிக்கப்பட்டது.

(…….)

10. டொனமூர் முறையின் அமைச்சரவை,
   1) அரசாங்க சபையின் நியமன உறுப்பினர்களில் இருந்து மட்டுமே தெரிவு செய்யப்பட்டது.
   2) தேசாதிபதியால் நியமிக்கப்பட்டது.
   3) வருடாந்த வரவு செலவுத் திட்டம் பற்றிக் கூட்டாகப் பொறுப்புக் கூறியது.
   4) அரசாங்க உத்தியோகத்தர்கள் உள்ளடக்கப்படவில்லை.

(…….)

11. பிரித்தானியர் குடியேற்ற நாட்டாச்சிக் காலத்தில் இடம் பெற்ற சமூக பொருளாதார அபிவிருத்திகள் பற்றிய பொருத்தமற்ற கூற்றை இனங் காண்க.
   1) ஆங்கிலக் கல்விமுறையை அறிமுகப்படுத்தியது.
   2) கிறிஸ்தவ மதத்திற்கு அரசமத அந்தஸது வழங்கப்பட்டது.
   3) வர்த்தகப் பயிர்ச் செய்கை முறை அறிமுகப்படுத்தப்பட்டது.
   4) சுதந்தில ஊழியச் சந்தை முறையொன்று உருவாக்கப்பட்டது.

(…….)

12. கோல்புறூக் - கமறன் சீர்திருத்தத்தோடு தொடர்பற்ற கூற்றை இனங்காண்க.
   1) கரையோரம் - மலையகம் ஆகிய பிரதேசங்களுக்கு இரு வேறுபட்ட நிருவாக முறைகளை சிபாரிசு செய்தது.
   2) இராசகாரிய முறை ஒழிக்கப்பபட்டது.
   3) தேசாதிபதிக்கு உதவுவதற்கு சட்ட நிருபண சபையும் சட்ட நிருவாக சபையும் தாபிக்கப்படன.
   4) சுதந்திர நீதிமுறையொன்ற அறிமுகம் செய்யப்பட்டது.

(…….)

13. 1883 இல் தாபிக்கப்பட்ட சட்ட சபையோடு தொடர்பற்ற கூற்றை இனங்காண்க.
   1) அது 15 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.
   2) அதற்கு ஆலோசனை கூறும் கடமை மட்டுமே வழங்கப்பட்டது.
   3) அது மக்கள் பிரிதிநிதிகள் மன்றமாக இருக்கவில்லை.
   4) அது தேசாதிபதியைப் பதவி நீக்கும் அதிகாரத்ததைப் பெற்றிருந்தது.

(…….)

14. இலங்கை தேசிய இயக்கத்தோடு தொடர்பற்ற கூற்றை இனங்காண்க.
   1) அது தீவிர மகாஜன இயக்கமாக இருந்தது.
   2) அது மேற்கத்திய கல்வியைப் பெற்ற உயர் குழுாம் வகுப்பினரால் கொண்டு நடாத்தப்பட்டது.
   3) அது உள்ளூர் சுயாட்சியைக் கோரியதன்றி சுதந்திரத்தைக் கோரவில்லை.
   4) அது நோக்கங்களை நிறைவு செய்வதற்கு அமைதியான வழிமுறைகளைப் பின்பற்றயது.

(…….)

MJM. Saneer MA 077 980 1693

15. 1930 களில் இடதுசாரி இயக்கத்தோடு தொடர்பற்ற கூற்றை இனங்காண்க.
    1) அது மேற்கத்திய கல்விமுறையைப் பெற்ற புத்தி ஜீவிகளால் ஆரம்பிக்கப்பட்டது.
    2) அது பிரித்தானிய ஆட்சியிலிருந்து பூரண சுதந்திரத்தைக் கோரியது.
    3) அது சோசலிஸப் புரட்சியல் நம்பிக்கை வைக்கவில்லை.
    4) அது பிரிதானமாக நகர்ப்புற தொழிலாளர் வர்க்கத்தினர் மத்தியிலேயே செயற்பட்டது.

(…….)

16. 1910 – 1924 காலப்பகுதியல் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்புச் சீர்திருங்களோடு தொடர்பற்ற கூற்றை இனங்காண்க.
    1) 1910 சீர்திருத்தத்தின் கீழ் உத்தியோக அங்கத்தவர்களின் பெரும்பான்மை தொடர்ந்தும் பேணப்பட்டது.
    2) 1920 சீத்திருத்தத்தின்கீழ் உத்தியோகபற்ற அங்கத்துவர்கள் பெரும்பான்மையாகினர்.
    3) 1924 சீர்திருத்தத்தின் கீழ் தேசாதிபதி சட்ட சபைக்குப் பொறுப்புக் கூறுபவராக ஆக்கப்பட்டார்.
    4) மூன்று சீர்திருத்தங்களிலும் இனவாரிப் பிரதிநிதித்துவம் தொடர்ச்சியாகப் பின்பற்றப்பட்டது.

(…….)

17. 1833 – 1924 காலப்பகுதியல் தாபிக்கப்பட்ட சட்டத்துறையின் உறுப்பினர்கள் எண்ணிக்கையோடு தொடர்பான சரியான விடையை இனங்காண்க.

| | | | | |
|---|---|---|---|---|
| 1) | 1833 – 15 | 1910 – 21 | 1920 – 37 | 1924 – 49 |
| 2) | 1833 – 15 | 1910 – 21 | 1920 – 27 | 1924 – 49 |
| 3) | 1833 – 15 | 1910 – 21 | 1920 – 36 | 1924 – 49 |
| 4) | 1833 – 15 | 1910 – 21 | 1920 – 23 | 1924 – 37 |

(…….)

18. 1931 இல் வழங்கப்பட்ட சர்வசன வாக்குரிமைக்குப் பொறுத்தமற்ற கூற்றை இனங்காண்க.
    1) அது சாதாரண மக்கள் மத்தியல் அரசியல் உணர்வை ஏற்படுத்தியது.
    2) அது வாக்காளர்களின் தேவைகளில் சுதேசிய அரசியல் வாதிகள் அதிக கவனம் செலுத்துவதைத் தூண்டியது.
    3) அது இலங்கையில் அரசியல் கட்சி முறை ஒன்ற தோன்றுவதற்கான தளத்தை அமைத்தது.
    4) அது வாக்காளர் மத்தியில் அரசியல் வன்செயலைத் தூண்டியது.

(…….)

19. 1931 இல் தாபிக்கப்பட்ட நிருவாகக் குழு முறைக்குப் பொருத்தமற்ற கூற்றை இனங்காண்க.
    1) அதன் மூலம் இலங்கை அரசியல்வாதிகள் 7/10 பங்கு நிருவாக அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தினர்.
    2) அரசாங்க சபையில் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களை மட்டுமே நிருவாகக் குழுக்கள் கொண்டிருந்தன.
    3) ஒரு தனி உறுப்பினர் ஒரு நிருவாகக் குழுவில் மட்டுமே சேவையாற்றினர்.
    4) அரசாங்க உத்தியோகத்தவர்கள் நிருவாகக் குழுமுறையிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்னர்.

(…….)

20. 1931 அரசியல் யாப்பின் கீழ் தேசாதிபதி வகித்த நிலைமைக்குப் பொருத்தமான கூற்றை இனங்காண்க.
    1) அவர் அரசாங்க சபைக்குப் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டிருந்தார்.
    2) அவர் நிருவாகக் குழுக்களைத் தாபிக்கும் அதிபாரத்தைப் பெற்றிருந்தார்.
    3) அவர் அரசாங்க சபை நிறைவேற்றும் மசோதாக்கள் மீது இரத்து அதிகாரம் பெற்றிருந்தார்.
    4) அவர் நிருவாகக் குழுக்களின் தலைவர்களைத் தெரிவு செய்தார்.

(…….)

- 21 – 24 வரையிலான வினாக்களில் இடம்பெறும் பிழையான கூற்றினை இனங்காண்க.

21. கோல்புறூக் - கமறன் சீர்திருத்தங்கள்
    1) தேசாதிபதியின் தான்றோன்றித்தனமான ஆட்சியைப் பலயீனப்படுத்தியது.
    2) வரையறுக்கப்பட்ட வாக்குரிமையை முன்மொழிந்தது.
    3) பாராளுமன்ற நிறுவனங்களின் ஆரம்பத்தைக் குறித்து நின்றது.
    4) ஒரு சுதந்திரமான நீதித்துறையை எதிர்பார்த்தது.

(…….)

MJM. Saneer MA 077 9801693

22. பிரித்தானியர் ஆட்சியின் ஆரம்ப கட்டத்தில் எழுச்சியடைந்த மத்திய வகுப்பு,
    1) ஒரு ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தினை வழிநடத்தியது.
    2) பிரித்தானிய சாம்பிராட்சியத்தினுள் ஓர் உள்ளூர் சுயாட்சியைக் கோரியது.
    3) ஜனநாயக அரசியலினுள் சாதாரண பொது மக்களைக் பிளவுபட்ட தேசிய இயக்கதினை உருவாக்கியது.

(…….)

23. 1911 – 1924 காலப் பகுதியில் அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள்
    1) உத்தியோகப்பற்ற அஙடகதடதுவரடகளின் அதிகாரங்களை படிப்படியாக அதிகரித்தன.
    2) சட்ட நிரூபண சபையின் பிரதிநிதித்துவ அடிப்படையை விரிவாக்கின.
    3) பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தை பெருமளவு முக்கியத்துவப்படுத்தின.
    4) இனவாரிப் பிரதிநித்துவத்தை முற்றாக ஒழித்தன.

(…….)

24. 1924 இன் அரசியலமைப்புச் சீர்திருத்தம்
    1) இலங்கை தேசிய காங்கிரஸின் செல்வாக்குக்குட்பட்டது.
    2) அகில இலங்கை தமிழ் காங்கிரஸால் நிராகரிக்கப்பட்டது.
    3) தேசாதிபதியின் நிருவாக அதிகாரங்களைப் பாதிக்கவில்லை.
    4) நிதிக் குழுவை அறிமுகப்படுத்தியது.

(…….)

- 25 – 28 வரையிலான வினாக்களில் இடம்பெறும் சரியான கூற்றுக்களை இனங்காண்க.

25. டொனமூர் ஆணைக்குழு
    1) அரசியல் கட்சிகளுக்கு அதிகளவு பங்கினை வழங்க விரும்பியது.
    2) இலங்கையருக்கு முழுப் பொறுப்பாட்சி அரசாங்கத்தை வழங்கியது.
    3) தேசாதிபதியிடமிருந்து அரசியல் குறைந்துவரும் பங்கினை எதிர்பார்த்தது.
    4) சமநிலைப் பிரதிநிதித்துவத்தை ஆதரித்தது.

(…….)

26. டொனமூர் முறையில் இலங்கை அமைச்சர்கள்
    1) அரசியல் அமைப்பு காவல்நாய்கள் பங்கினை வகிக்க வேண்டியிருந்தது.
    2) நிருவாகக் குழுக்களால் நியமிக்கப்பட்டனர்.
    3) கூட்டுப் பொறுப்புத் தத்துவத்தைப் பின்பற்றினர்.
    4) நிதி மசோதாக்கள் பற்றி தேசாதிபதியால் கலந்தாலோசிக்கப்பட்டனர்.

(…….)

27. அரசாங்க சபை,
    1) சட்டத்துறை மற்றும் நிருவாகத்துறை கூட்டத் தொடர்களை நடாத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது.
    2) தேசாதிபதியின் ஒதுக்கதிகாரங்கள் மீது கட்டுப்பாட்டினைப் பெற்றிருந்தது.
    3) அரசாங்க சபையால் நிதியல்லாத மசோதாக்கள் நிராகரிக்கப்படும் போது கலைக்கப்பட வேண்டியிருந்தது.
    4) அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் மீது கூட்டுப் பொறுப்பினைப் பெற்றிருக்கவில்லை.

(…….)

28. இலங்கையின் கோல்புறூக் - கமறன் சீர்திருத்தங்களின் கீழ் மாற்றங்களை விபரிக்கும் சரியான சேர்மானங்களை விபரிக்கும் கூற்றுக்கனை இனங்கண்டு பொருத்தமான எண்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.
    A. இராசகாரிய முறை ஒழிக்கப்பட்டமை
    B. இலங்கை ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமை
    C. கரையோர மற்றும் கண்டி மாகாணங்களுக்குத் தனித்தனியான நிருவாக முறைகள் தோற்றுவிக்கப்பட்டமை
    D. ஒரு புதிய நீதித்துறை அறிமுகம் செய்யப்பட்டமை.
    (1) AB (2) ABC (3) ABD (4) ABCD (…….)

MJM. Saneer MA 077 980 1693

29. சரியான சேர்மானங்களை விபரிக்கும் கூற்றுக்கனை இனங்கண்டு பொருத்தமான எண்களை புள்ளிக் கோட்டில் எழுதுக.

A. கோல்புறூக் - கமறன் சீர்திருத்தங்கிளன் கீழ் முதன் முதலாக சட்ட நிருபண சபை அறிமுக்கப்படுத்தப்பட்டமை.

B. மனிங் அரசியல் யாப்பின் கீழ் முதன் முறையாக உத்தியோகப்பற்றற்ற அங்கத்துவர்கள் இடம் பெற்றமை.

C. டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் சட்ட சபையில் மூன்று உத்தியோக அங்கத்துவர்கள் இடம் பெற்றமை.

D. 1833 இலிருந்து 1931 வரை சட்ட நிருபண சபை நடவடிக்கைகளில் மக்கள் பிரதிநிதிகள் பங்குபற்றல் முன்னேற்றமடைந்து வந்துள்ளது.

(1) AB (2) ABC (3) ABD (4) ABCD (…….)

30. இதேசியத்துவ இயக்கத்தினை மிகப் பொருத்தமாக விபரிக்கும் சேர்மானமான கூற்றுக்களை இனங்காண்க.
தேசியத்துவ இயக்கதிதனைப் பின்வருமாறு விபரிக்கலாம்.

A. ஒரு அரசியல் யாப்புச் சீர்திருத்த இயக்கமாக

B. மேலைத்தேயமான உயர்ந்தோர் குழுவினரால் தலைமை தாங்கப்பட்ட இயக்கமாக

C. இலங்கையருக்கு கூடுதலான பொறுப்புவாய்ந்த அரசாங்கத்தை உருவாக்குவதை நோக்கியதொரு இயக்கம்

D. ஒரு வெகுசன இயக்கம்

(1) AB (2) ABC (3) ABD (4) ABCD (…….)

- டொனமூர் அரசாங்கம் பற்றிய 31 – 33 ஆம் கேள்விகளில் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றின் எண்ணை புள்ளிக் கோட்டில் எழுதுக.

31.
1) மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசியல் யாப்பின் காவல் நாய்கள் என இனங்காணப்பட்டமை.
2) அரசாங்க உத்தியோகத்தர்களைத் தவிர்ந்த மற்றைய அரசாங்க சபை உத்தியோகத்தவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படனர்.
3) டொனமூர் காலப் பகுதியின் இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மக்கள் பிரிதிநிதிகளுடன் ஒத்துழைத்துச் செயல்பட்டனர்.
4) பிரித்தானியப் பாராளுமன்றத்திற்கே தேசாதிபதி பொறுப்புச் சொல்ல வேண்டியவராயிருந்தார்.

(…….)

32.
1) மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களைத் தவிர அரசாங்க சபையின் எல்லா அங்கத்துவர்களும் 7 நிருவாகக் குழுக்களாகத் தம்மைப் பிரித்துக் கொண்டனர்.
2) அரசாங்க சபை ஒரு சட்ட சபையாகவும் ஒரு நிருவாக அங்கமாகவும் செயற்பட்டது.
3) அரசின் எல்லா விடயங்களுக்கும் அரசாங்க சபைக்கு அமைச்சர்கள் சபை கூட்டுப்பொறுப்பாகவிருந்தது.
4) அமைச்சர்கள் சபை நிருவாகக் குழுக்களின் தலைவர்களையும் மூன்று அரசாங்க உத்தியோகத்தர்களையும் உள்ளடக்கியிருந்தது. (…….)

33.
1) இன ரீதியான பிரதிநிதத்துவம் ஒழிக்கப்பட்டது.
2) 21 வயதுக்கு மேற்பட்ட குறிப்பிட்ட சொத்துடைய கல்வித் தகைமை கொண்டவர்கள் வாக்காளர்களாக அங்கீகரிக்கப்பட்டனர்.
3) பிரதேச அடிப்படையிலான தேர்தல் தொகுதிகள் மேலும் விஸ்தரிக்கப்பட்டன.
4) முதன் முதலாக இலங்கைக்கு சர்வசன வாக்குரிமை வழங்கப்பட்டது. (…….)

MJM. Saneer MA 077 9801693

- 34 – 36 வரையிலான வினாக்களில் இடம்பெறும் பொருத்தமற்ற கூற்றினை இனங்காண்க.

34. 1833 இல் இராஜகாரிய முறை ஒழிக்கப்பட்டமை
    1) சுதந்திரமான தொழிற்சந்தை உருவாக்குவதற்கான களத்தினை ஏற்படுத்தியது.
    2) இலங்கையில் ஐரோப்பிய முதலீட்டினை ஏற்படுத்தும் தடையினை அகற்றியது.
    3) கறுவா வர்த்தகத்தில் பிரித்ததானிய கிழக்கிந்தியக் கம்பனியின் தனியுரிமையினை பலப்படுத்தியது.
    4) மரபு ரீதியான நிலவுரிமை முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

35. 19 ஆம் நூற்றாண்டில் பெருந்தோட்டப் பொருளாதாரம் ஆரம்பிக்கப்பட்டது
    1) இலங்கையில் ஒரு முதலாளித்துவப் பொருளாதாரம் உருவாக வழிவகுத்தது.
    2) இலங்கயின் மரபு ரீதியான நெற்பயிரச் செய்கைக்கு உற்சாகமளித்தது.
    3) ஒரு சுதேசிய மத்திய தர வர்க்கம் தோற்றம் பெற வழிவகுத்தது.
    4) புதிய மாதிரியிலான பொருளாதார நடவடிக்கைகளை உள்ளூர் சமூகத்திற்கு அறிமுகப்படுத்தியது.

(…….)

36. கமறனின் சீர்திருத்த யோசனைகளின் எதிர்பார்ப்பு
    1) நீதித் துறையின் சுதந்திரம்
    2) இறுதி மேன்முறையீட்டு நீதிமன்றமாக உயர் நீதிமன்றத்தினை உருவாக்குதல்.
    3) கிறிமினல் வழக்குகளை விசாரிக்கும் ஒரு மேல் நீதிமன்றம் ஒன்றை உருவாக்குதல்.
    4) மாவட்ட நீதிமன்றங்களை உருவாக்குதல்.

(…….)

37. 1924 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பு
    1) முதன் முறையாக சட்ட நிரூபண சபையில் தெரிவு செய்யப்பட்டவர்களின் பெரும்பான்மையை உருவாக்கியது.
    2) பொறுப்பிலிருந்து அதிகாரத்தினை பிரித்தமையால் திருப்திகரமானதாக இருக்கவில்லை.
    3) 1917 இல் இலங்கை சீர்திருத்தக் கழகத்தினால் முதலில் பிரேரிக்கப்பட்டது.
    4) வகுப்புவாத பிரதிநிதித்துவத்தை நீக்கவில்லை.

(…….)

- டொனமூர் அரசாங்கம் பற்றிய 38 முதல் 41 வரையிலான கேள்விகளில் ஒரு கூற்று பிழையானதாகும். பிழையான கூற்றின் எண்ணை புள்ளிக் கோட்டில் எழுதுக.

38. டொனமூர் அரசியல் யாப்பு
    1) உள்ளூர் தலைவர்களுக்கு 7/10 பங்கு அதிகாரத்தினை வழங்கியது.
    2) மந்திரி சபை கூட்டுப் பொறுப்பு என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
    3) வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் போது மட்டுமே அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்பை எதிர்பார்த்தது.
    4) அரசியல் சர்ச்சைகளிலிருந்து விலகியிருக்கும் ஒரு தேசாதிபதியை எதிர்பார்த்தது.

(…….)

39. நிருவாகக் குழுமுறை
    1) அரசாங்க சபையிலிருந்த தனிப்பட்ட அங்கத்துவர்களுக்கு நிருவாக அனுபவங்களைப் பெற உதவியது..
    2) அரசாங்கத்தின் நிருவாகத்தினை தேவையில்லாமல் தாமதப்படுத்தியது.
    3) கட்சிமுறையொன்று இல்லாமையால் சிபாரிசு செய்யப்பட்டது.
    4) தேசாதிபதி கல்டிகற்றின் சீர்திருத்த பிரேரணைகளில் பெரிதும் போற்றப்பட்டது.

(…….)

40. அமைச்சர்கள் சபை
    1) தேசாதிபதியினால் தலைமை தாங்கப்பட்டது.
    2) ஒரே தன்மையான ஸ்தாபனமாக இருக்கவில்லை.
    3) அரசாங்கத்தின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தது.
    4) 1940 களில் நாட்டினை உண்மையாக ஆட்சி செய்யும் அமைப்பாக எழுச்சியடைந்தது. (…….)

MJM. saneer MA 077 980 1693

41. அரசாங்க உத்தியோகத்தர்கள்
   1) நாட்டில் ஏகாதிபத்திய நலன்களை காப்பதற்காக தெரிவு செய்யப்பட்டனர்.
   2) அரசாங்க சபையில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.
   3) மந்திரி சபையில் ஓர் உள்சபையாகக் கடமையாற்றினர் எனக் கண்டிக்கப்பட்டனர்.
   4) பிரித்தானிய அரசாங்கத்தின் பிரதிநிதிகளாக விளங்கி தேசாதிபதியுடன் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தனர்.

(…….)

- 42 முதல் 45 வரையிலான வினாக்களில் பொருத்தமற்ற கூற்றுக்களைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கொட்டில் எழுதுக.

42. பின்வருவன பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டன.
   1) இறக்குமதி – ஏற்றுமதிப் பொருளாதாரம்
   2) இராஜகாரிய முறை
   3) கச்சேரி முறை
   4) ஒரு நவீன சட்டமுறை

(…….)

43. 1833 இல் சட்ட நிருபண சபை உருவாக்கப்பட்டது.
   1) மொத்தமாக 15 உறுப்பபினர்களைக் கொண்டதாக
   2) 06 உத்தியோகப்பற்றற்ற 10 உத்தியோக அங்கத்துவர்களைக் கொண்டதாக
   3) அரசாங்கத்தின் இராணுவச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம்
   4) தேசாதிபதி பதவி வழி சபையின் அங்கிராசனராக

(…….)

44. இலங்கை தேசிய காங்கிரஸ்
   1) 1919 இல் உருவாக்கப்பட்டது.
   2) அதன் இறுதி இலக்காக உள்ளூர் சுயாட்சி அரசாங்கம் என்பதை ஏற்றுக் கொண்டது.
   3) 1920 இல் அறிமுகம் செய்யப்பட்ட யாப்புச் சீர்திருத்தங்கள் மீது செல்வாக்குச் செலுத்தியது.
   4) உள்ளூர் பிளவுகளால் பலவீனமடைந்தது.

(…….)

- 45 - 50 வரையிலான வினாக்களுள் சரியான சேர்மானமான கூற்றுக்களை அடையாளம் காண்க.

45. டொனமூர் ஆணைக்குழு
   A. மாகாண சபைகள் உருவாக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்தது
   B. அரசாங்க சபையிடமிருந்து நிருவாக சட்டவாக்க கடமைகளை எதிர்பார்த்தது.
   C. வகுப்புவாத அரசியலை தளர்ச்சியடைச் செய்ய விரும்பியது.
   D. ஒரு இரண்டாவது சபையை உருவாக்க வேண்டும் என்ற பிரேரனையை ஏற்றுக் கொண்டது.

   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB (…….)

46. டொனமூர் யாப்பில் தேசாதிபதி
   A. அரசாங்க சபையினைக் கலைக்கும் அதிகாரம் ஒப்படைக்கப்படடது.
   B. அரசியலிருந்து விலகி இருக்க எதிர்பார்க்கப்பட்டது.
   C. அமைச்சர்கள் சபையில் இலங்கை அங்கத்துவர்களை நியமித்தார்.
   D. 1931-36 க்குமிடையில் மூன்று அரசாங்க உத்தியோகத்துவர்களுடனும் மிகவும் நெருக்கமாகச் செயற்படடார்.

   (1) ABC (2) BCD (3) CDA (4) DAB (…….)

MJM.Saneer MA 077 980 1693

47. டொனமூர் யாப்பில் நிருவாக் குழு

A. சிறுபான்மைப் பிரதிநிதிகளுக்கு நிருவாக அதிகாரத்தினை பகிர்ந்து கொள்ள இடமளித்தது.
B. அரசாங்கம் திறமையற்றதும் மெதுவாகவும் செயற்பட்டது.
C. அரசாங்க சபையின் சாதாரண அங்கத்துவர்கள் முன்னணிப் பங்காற்றிட வழிவகுதத்து
D. யுத்தத்தின் போது அரசாங்கத்தின் மிகவும் பலம் வாய்ந்த ஸ்தாபனமாகியது.

(1) ABC (2) BCD (3) CDA (4) DAB (…….)

48. 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் பொருளாதார நிலை

A. சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம்
B. 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய மானிய முறைச் சமூகம் சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
C. பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தமை.
D. வர்த்தக சமூக முறையொன்று தோற்றம்.

(1) AB (2) ABC (3) CD (4) ABCD (…….)

49. 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இலங்கையின் பொருளாதார நிலை

A. சுயதேவைப் பூர்த்திப் பொருளாதாரம்
B. 19 ஆம் நூற்றாண்டில் நிலவிய மானிய முறைச் சமூகம் சாதியை அடிப்படையாகக் கொண்டிருந்தது.
C. பெருந்தோட்டப்பயிர்ச் செய்கையை அடிப்படையாகக் கொண்ட ஏற்றுமதிப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தமை.
D. வர்த்தக சமூக முறையொன்று தோற்றம்.

(1) AB (2) ABC (3) CD (4) ABCD (…….)

50. இடதுசாரி இயக்கத்தின் வளர்ச்சிக்கு ஏதுவான காரணிகள்

A. சூரியமல் இயக்கத்ததை ஆரம்பித்து அதன் மூலம் கிடைத்த வருமானத்தை மலேரியா ஒழிப்புக்குப் பயன்படுத்தியமை.
B. இடதுசாரிக் கட்சிகள் ஆரம்பிக்கப்பட்டமை.
C. தொழிற்சங்கங்கள் பலம் பெற்றமை.
D. அரசாங்க சபைக்கு இடதுசாரிகள்தெரிவு செய்யப்பட்டமை.

(2) AB (2) ABC (3) CD (4) ABCD (…….)

MJM. Saneer MA 077 980 1693